25th September 1956] [Sri K. R. Nallasivam]

முன்னால் கிணற்றுப் பாசன விஸ்தீரணம் எவ்வளவு என்று சரியாகத் தெரியாமல் அவர்கள் வெள்ளாண்மை செய்துவிடுகிறார்கள். அதன் காரணமாக தண்டத் தீர்வை விதிக்கப்படுகிறது. 50,100 ஏகராவில் ஒரு பகுதி கிணற்றுப் பாசனத்தில் இருந்தாலும் அதற்கும்கூட கீழ் பவானி திட்டத்தின்கீழ் தண்டத் தீர்வை விதிக்கப்படுகிறது.

நீர்க்கசிவு ஏற்படாது என்று நினைத்து முதலில் பருத்தி பயிரிடுகிறார்கள். பின்னால் தண்ணீர் வந்தவுடனே நீர்க்கசிவு ஏற்பட்டு பருத்தி அழுகிப்போய் விடுவதால், நெல் வைக்கிறார்கள். ஆனால் நெல்லுக்கும் அழுகிப்போன பருத்திக்கும் சேர்த்து ஏகராவுக்கு ரூ. 20 தண்டத் தீர்வை விதிக்கிறார்கள்.

கிராம அதிகாரிகள் **Manual**-படி டிமாண்ட் நோட்டீஸ் கொடுப்பதே கிடையாது. விவசாயிகளிடம் வாய்மொழியாக இவ்வளவு தீர்வை என்று கிராம அதிகாரிகள் சொல்லிவிடுகிறார்கள். அதை அப்படியே விவசாயிகள் ஒத்துக்கொள்ள வேண்டியதாயிருக்கிறது. எந்த நெம்பர் நிலத்துக்கு எத்தனை ஏகருக்கு எந்த வெள்ளாண்மைக்கு எவ்வளவு தீர்வை என்று விவசாயிகளுக்கு அதிகாரப்பூர்வமான தகவல் கிடைப்பது கிடையாது. இவைகளெல்லாம் அடங்கிய டிமாண்ட் நோட்டீஸ் அவரவர்களுக்குக் கொடுப்பதேயில்லை. அதன் காரணமாக கிராம அதிகாரிகள் 10 ரூபாய்க்குப் பதில் 20 ரூபாய் தீர்வை என்று சொன்னாலும் விவசாயிகள் அதை செலுத்த வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படுகிறது.

சில இடங்களில் கால்வாய்கள் இருக்கின்றன. மழைபெய்ததன் காரணமாக அங்கு வெள்ளாண்மை செய்திருப்பார்கள். அதைக் கணக்கிலே எடுத்துக்கொள்வதில்லை. வரும் அதிகாரிகள் தூரத்திலிருந்து பார்ப்பார்கள். வரப்பிலிருந்து பார்க்கும்பொழுது பச்சைப் பசேல் என்று தெரிந்தால் அங்கே வெள்ளாண்மை இருக்கிறது என்று கணக்கில் எடுத்துக்கொண்டு, கால்வாய் பிரதேசத்திற்கும் சேர்த்து தீர்வை போடுகிறார்கள்.

இம்மாதிரியாக பலவிதமான தண்டத் தீர்வை பல சிக்கல்களுக்கிடையே வசூல் செய்யப்படுகிறது. இதனால் விவசாயிகள் மிகவும் அவஸ்தைப் படுகிறார்கள். ஆகையால் இதை ரத்துசெய்வதற்கு உடனடியாக ஏற்பாடு செய்யவேண்டுமென்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

* THE HON. SRI M. A. MANICKAVELU : Sir, this matter has come up before the House over and over again in some form or other. I submit that the whole matter was gone into recently on the representations made. There was also a conference of the Ministers concerned. The Government are carefully examining the matter and very soon orders will be issued. 10-10 a.m.

III.—DELEGATION OF MEMBERS TO WAIT UPON THE CENTRAL GOVERNMENT *RE* BORDER DISPUTE WITH THE ANDHRA STATE.

SRI P. RAMAMURTHI : Mr. Speaker, Sir, I wish to draw the attention of the Government to certain things which are agitating the minds of the people. The question came up yesterday when you were not occupying the Chair—the Deputy Speaker was then in the Chair. The Deputy Speaker read out a message from the Commissioner of Police saying that a Member of this House, Sri K. Vinayakam, had been arrested. I am not now going into the question of his arrest as such. It is certainly an unfortunate thing. But the particular cause for which he has courted arrest, we know, has got the support of all members of

this House, practically the entire House. So far as the northern boundary is concerned, the Government had taken some stand some time back. There was a debate on the question in this House. During the debate there was practical unanimity on the point that the stand taken by the Government of Andhra was not correct and that that Government was going back on certain commitments already made. In view of this it was stated at that time that the Central Government must be addressed and representations made to them that they should adhere to the promises and undertakings given about three years ago when the Andhra State was formed. Unfortunately the Central Government had not come forward with a statement on the question.

Therefore, in view of the fact there is practical unanimity in this House on this question, I would suggest that a delegation composed of members from all parties representing the entire House may wait upon the Central Government. If the Government of Madras have got any statement to make on the question, I would certainly welcome that statement. I feel that the unanimity of view that already exists in this House and outside should be properly represented and made known to the Central Government not only at the official level, but also non-officially so that a quick decision on the question may be taken. Therefore, I would ask the Hon. the Leader of the House whether he has got any statement to make on this question on behalf of Government, if not now, at least tomorrow.

THE HON. SRI C. SUBRAMANIAM : Now that the matter has been raised by the hon. the Leader of the Opposition, we would like to consider the whole thing and make a statement tomorrow, if a statement is necessary.

IV.—GOVERNMENT BILL.

THE MADRAS CULTIVATING TENANTS (PAYMENT OF FAIR RENT) BILL, 1956 (L.A. BILL NO. 4 OF 1956) (DISCUSSION)—*cont.*

10-13 a.m. * SRI S. SWAYAMPRAKASAM : சட்டசபைத் தலைவர் அவர்களே, இன்றைய தினம் பொது விவாதத்தில் இருக்கும் நியாய வார மசோதா எல்லா விதத்திலும் வரவேற்கப்படுவதாக இருந்த போதிலும் நிலப் பிரச்னை சம்பந்தமாக இந்த அரசாங்கம் சென்ற ஐந்தாண்டுகளாக கையாண்டு வரும் நிலையைப் பார்த்தால் இதனால் ஏற்பட்டிருக்கும் பலனை விட தீமைகள்தான் அதிகமாக இருக்கிறது என்று நினைப்பதற்கு இடம் இருக்கிறது. எனென்றால் எந்த முறையில் இந்தப் பிரச்னையை தீர்த்து வைக்க வேண்டுமோ அந்த முறையில் தீர்த்து வைக்கப்படாமல் எந்த அளவிற்கு முயற்சி எடுத்துக் கொள்ள வேண்டுமோ அந்த அளவுக்கு முயற்சி எடுத்துக் கொள்ளாமல் எதனை நல்ல முறையில் தீர்த்து வைக்க வேண்டுமோ அதனை அந்த முறையில் தீர்த்து வைக்காமல் ஒரு சட்டத்தைக் கொண்டு வருவதால்தான் தீமைகள் அதிகமாக ஏற்படுமோ என்று நினைக்க வேண்டியதாக இருக்கிறது. தஞ்சை பண்ணையாள் பாதுகாப்புச் சட்டம் ஐந்து வருஷங்களுக்கு முன்னதாகக் கொண்டு வரப்பட்ட பிறகு மற்ற இடங்களிலும் நில வெளியேற்றம் பெரிய அளவில் நடைபெற்று வந்ததால்தான் நில வெளியேற்றத் தடுப்புச் சட்டத்தைக் கொண்டு வந்து அதையும் நிறைவேற்ற வேண்டிய நிலை ஏற்பட்டது. அதற்குப் பிறகு இந்த இரண்டும் சேர்ந்து